(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 1(8).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 மார்ச் 25 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2022 ஏப்ரல் 05, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 8 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு இயல்புகூறுகள் மற்றும் பாதுகாப்பு இயல்புக் கூறுகள் முகாமை முறை தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 2249/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 10/2021)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 01 ஆம் திகதிய 2260/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2022)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 3),— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணங்கள் தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 01 ஆம் திகதிய 2260/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2022)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 06 ஆம் திகதிய 2261/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 சனவரி 11 ஆம் திகதிய 2262/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 122, 122அ மற்றும் VIIஅ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதிய 2251/63 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5, 19 மற்றும் 20 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 2240/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2022 ஏப்ரல் 06, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

41/2022

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இயற்கையாக வளரும் மனித நுகர்வுக்கு உகந்த காளான்கள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி காளான் வகைகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) இவற்றில் அகணிய காளான் வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் சுயதொழிலாக காளான் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் பயிர்ச்செய்கையாளர்களுக்குத் தேவையான விதைகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நாடுகள் யாவை;

(iii) இதற்காக ஒரு வருடத்துக்கு செலவிடப்படும் நிதித்தொகை யாது;

(iv) சுதேச காளான் விதைகளை பயிர்ச்செய்கையாளர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை ;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) காளான் பயிர்ச்செய்கையாளர்களுக்கு அரசாங்கம் சலுகைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அச்சலுகைகள் யாவை;

என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1029/2022

கௌரவ சாந்த பண்டார,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் யானை - மனித மோதல் காரணமாக உயிர் இழப்புகளும் சொத்துக்களுக்கான சேதங்களும் ஏற்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ள ஆட்களின் மரண எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக இடம்பெறுகின்ற ஆளொருவரின் மரணத்திற்காக தற்போது செலுத்தப்படுகின்ற நட்டஈட்டுத் தொகை யாது என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டில் காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக இடம்பெற்றுள்ள சொத்துக்களுக்கான சேதங்களுக்கென செலுத்தப்பட்ட மொத்த நட்டஈட்டுத்தொகை யாது என்பதையும்;

(iv) காட்டு யானைகளின் தாக்குதல்களிலிருந்து மக்களை விடுவித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2022 ஏப்ரல் 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

42/2022

கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நாணல், பிரம்பு, பன்புல் மற்றும் சணல் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளும் கிராமங்கள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கைத்தொழிலும் மேற்கொள்ளப்படும் கிராமங்களின் எண்ணிக்கை மற்றும் மேற்படி ஒவ்வொரு கைத்தொழிலிலும் ஈடுபடும் குடும்பங்களின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினைகள் யாவை;

(ii) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அது எவ்வாறு;

(iv) மேற்படி கைத்தொழிலாளர்களின் சந்தையினை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(v) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இன்றளவில் அலங்கார நாணல், பிரம்பு, பன்புல் மற்றும் சணல் சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், அந்நாடுகள் யாவை;

(iii) 2015 மற்றும் 2016ஆகிய ஒவ்வொரு வருடத்திலும் நாணல், பிரம்பு, பன்புல் மற்றும் சணல் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

256/2022

கௌரவ ஹேஷா விதானகே,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலிய தனியார் பவுசர் உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு உறுப்பினர்களினதும் பெயர், முகவரி மற்றும் இவர்களுக்குச் சொந்தமான பவுசர் வாகனத்தின் இலக்கம் என்பவை தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எரிபொருள் விலையேற்றத்திற்கு அமைவாக போக்குவரத்துக் கட்டணங்கள் திருத்தப்படாமையால் மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

576/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு விவசாய தரவுக்களஞ்சியம் ஒன்றினை நிறுவுவது மிகவும் முக்கியமானது என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், கமத்தொழில் அமைச்சினால் விவசாய தரவுக்களஞ்சியத்தினை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அதற்கென இது வரையில் செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) விவசாய தரவுக்களஞ்சியத்தை நிறுவுகையில் யாதேனும் மோசடி இடம்பெற்றிருப்பின், அது தொடர்பில் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1030/2022

கௌரவ சாந்த பண்டார,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்த வேண்டும் என்பதையும்;

(ii) அதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுப்பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கு தேசிய மரபுரிமைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தின் 04 பழைய இராசதானிகள் அமைந்துள்ள இடங்களின் பால் சுற்றுப்பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று தற்போது தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தம்பதெனிய ரஜமஹா விஹாரை மற்றும் இராசதானி என்பவை சுற்றுலா வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1180/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மொத்த குடும்பங்களில் நிரந்தர வீடற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்ட நாளிலிருந்து மேற்படி அதிகாரசபையினால் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள, உதவிகள் வழங்கப்பட்டுள்ள மற்றும் கடன் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மேற்படி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள மற்றும் உதவிகள் அளிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்களை திறந்து வைக்கும் போது, அதன் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2022 ஏப்ரல் 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

10/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் காணிகளை இழந்த ஆட்களுக்கு நியதிச்சட்ட முறையான நிர்ணயத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட வேண்டுமென்பதையும்;

(ii) ஆயினும், காணிகள் வழங்கப்பட வேண்டிய சகலருக்கும் அதன் கீழ் காணிகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) 2021.12.31 ஆந் திகதி வரை நியதிச்சட்ட முறையான நிர்ணயத்தின் கீழ் காணிகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எத்தனை ஹெக்டேர்கள் என்பதையும்;

(iii) அதன் கீழ் 2021.12.31 ஆந் திகதி வரை காணிகள் வழங்கப்பட வேண்டிய ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணிகளின் அளவு எத்தனை ஹெக்டேர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நியதிச்சட்ட முறையான நிர்ணயத்தின் கீழ் காணிகள் வழங்கப்படாத ஆட்களுக்கு வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு வசம் காணிகள் உள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி ஆட்களுக்கு காணிகள் வழங்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு காணிகளை வழங்குவதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு முறையான திட்டம் உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

43/2022

கௌரவ புத்திக பத்திறண,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 186 பன்குடாவெளி கிராம அலுவலர் பிரிவில், இலுப்பச்சேனை கிராமத்தில், முருகன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள பழங்கால இடிபாடுகள் கொண்ட இடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

255/2022

கௌரவ ஹேஷா விதானகே,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக குவைத் நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் மூடப்பட்டதன் நிமித்தம் குவைத்தில் பணிபுரிகின்ற இலங்கைத் தொழிலாளர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி தூதரகத்தின் கீழுள்ள காப்பகத்திலிருந்து பதிவாகியுள்ள கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது குவைத்தில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களை கொவிட்-19 பெருந்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

575/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பொருளாதார நிலையங்களைத் தாபித்ததன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) ஆரம்ப நோக்கங்களுக்குப் புறம்பாக மேற்படி பொருளாதார நிலையங்கள் தற்போது இயங்கிவருவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கையின் சகல பொருளாதார நிலையங்களையும் ஒரே நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1028/2022

கௌரவ சாந்த பண்டார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் சமுர்த்தி அனுகூலம் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது சேவையிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பாரிய சேவை ஆற்றப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொண்டுள்ள தொழில் ரீதியான பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) மேற்படி தொழில் ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்க இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) இன்றேல், மேற்படி தொழில் ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்படும் விதம் யாதென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1181/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டளவில் இலங்கையின் வறுமை நிலை சதவீதமாக யாது என்பதையும்;

(ii) சமுர்த்தி பயனாளிகளைத் தெரிவு செய்யும் முறையியல் யாது என்பதையும்;

(iii) சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு தகைமைபெறும் ஆகக் குறைந்த வருமான மட்டம் யாது என்பதையும்;

(iv) தற்போதுள்ள சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை அவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ஒவ்வொரு சமுர்த்தி நிவாரண உதவியின் பெறுமதியின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(v) சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்காக வருடாந்தம் செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

(vi) மரணம், வருமானம் அதிகரித்தல் மற்றும் வேறு காரணங்களின் அடிப்படையில் வருடாந்தம் சமுர்த்தி திட்டத்திலிருந்து நீக்கப்படுகின்ற சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமுர்த்தி நிவாரணம் கிடைக்க வேண்டுமாயினும் இன்றளவில் சமுர்த்தி நிவாரணம் கிடைக்காதுள்ள குறைந்த வருமானம் பெறுகின்ற பெரும் எண்ணிக்கையானோர் உள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1196/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சரும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச்செயற்படுத்துகை அமைச்சரும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹொரண, வகவத்தை டயர் தொழிற்சாலை நிர்மாணக் கருத்திட்டத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட நிதியங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பானது எத்தனை மெகாவாட் என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்கான நுழைவுப் பாதையை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்தால் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1318/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2010, 2015 மற்றும் 2019 ஆகிய ஒவ்வொரு ஆண்டிலும் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது;

(ii) மேற்படி விபத்துக்களின் காரணமாக மரணித்த நபர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி விபத்துக்களின் காரணமாக சேதமடைந்துள்ள சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1476/2022

கௌரவ ரோஹண பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள குளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்குளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக்குளங்களுள் அரசாங்கத்தின் குளங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்கால நிகழ்ச்சித்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள குளங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அக்குளங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டத்தினுள் உள்ளடக்கப்படாத குளங்களையும் துரிதமாக புனரமைப்புச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1735/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் 2021/2022 ஆம் ஆண்டு பெரும் போகத்தின் போது செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) இப்போகத்தில் எதிர்பார்க்கப்படும் நெல் அறுவடையின் அளவு யாதென்பதையும்;

(iii) அந்த நெல் அறுவடையை கொள்வனவு செய்வதற்காக இன்றளவில் அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2022 ஏப்ரல் 19, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

6/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் குருநாகல் தொடக்கம் தம்புள்ளை வரையிலான நான்காம் கட்டத்தின் நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தத்திற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த கம்பெனிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நெடுஞ்சாலையை அமைக்கும் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு நிதியைப் பெற்றுக்கொள்ளும் மூலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

39/2022

கௌரவ புத்திக பத்திறண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டுக்களை அச்சிடும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) அந்நிறுவனங்களைத் தெரிவு செய்யும் முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு லொத்தர் சீட்டினை அச்சிடுவதற்கு மேற்குறிப்பிட்ட நிறுவனங்களினால் அறவிடப்படும் தொகை தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) லொத்தர் சீட்டுக்களை அச்சிடும்போது, 2014.12.31ஆம் திகதிக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட நிறுவனம் / நிறுவனங்களது விலைகள் மூலம் பாரியளவு நிதி முறைகேடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்விசாரணையின் முடிவுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

254/2022

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பழம்பெரும் நடிகர் திரு. சௌமிய லியனகே அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு பீடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அவர் அப்பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

569/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிராமிய மூலதன வங்கி என்ற பெயரில் வங்கி நிறுவப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்தையும்;

(ii) இலங்கை மத்திய வங்கியினால் இவ்வங்கி ஒழுங்குறுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1022/2022

கௌரவ சாந்த பண்டார,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) பத்திக் கைத்தொழில் உள்நாட்டுக் கைத்தொழிலாக இலங்கையில் காணப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) இன்றளவில் பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) மேற்படி தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு அமைச்சிடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) பத்திக் உற்பத்தியில் மேற்படி தொழில்முயற்சியாளர்கள் பழைய செயன்முறை களையும் வடிவமைப்புகளையுமே பயன்படுத்துகின்றார்கள் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஈ) புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நவீன வடிவமைப்பின் பிரகாரம் பத்திக் உற்பத்தி செய்வதற்கு வழிகாட்டும் வேலைத்திட்டமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1175/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1189/2022

கௌரவ நலின் பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) “தாமரை கோபுரம்” கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இக்கருத்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் ஊடாக ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1319/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது உற்பத்தி நடவடிக்கைகளுக்காக கைத்தொழிலாளர்களுக்கு செப்பு வழங்குகின்றதா;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டு முதல் 2019 வரையில் ஒவ்வொரு ஆண்டிலும் இவ்வாறு வழங்கப்பட்டுள்ள செப்பின் அளவு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய இன்ஷாப் அஹமட் என்பவருக்குச் சொந்தமான கம்பனிக்கு செப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள செப்பின் அளவு யாது;

(iii) இந்த செப்பினைக் கொண்டு மேற்படி கம்பனி மேற்கொண்டுள்ள உற்பத்திகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1467/2022

கௌரவ ரோஹண பண்டார,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) அனுராதபுர நகர எல்லைக்குள் பல சட்டவிரோத நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புக்களைத் தடுப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1736/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபையின் நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்ற பண்ணைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி ஒவ்வொரு பண்ணையிலும் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் மற்றும் மேற்படி ஒவ்வொரு வகைகளும் உற்பத்தி செய்யப்பட்ட அளவு ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி பண்ணைகளை மேற்கொண்டும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?